[1973 டிசம்பர் 4

கடவுளர் சிலை திருட்டுகள்

*** 627 வினு—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்டு மாதத்தில், மதுரை உததமபாளையத்தில் ஐம்பொன்னுல் செய்யப்பட்ட பழங்கால சாமி சிலைகள் களவு போய் உள்ளதா ?

(இ) ஆம் எனில், திருடு போன சிலைகள் எத்தனை ?

(உ) அந்தச் சிலைகளின் விலை மதிப்பென்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மூன்று.

(உ) ரூ. 2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்).

*** 628 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுகா, திருவிளக்குடி கோயிலில் அண்மை யில் சாமி சிலைகள் திருட்டுப் போயினவா ?

(இ) அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார், யார் ? தண்டனை அடைந்தவர்கள் யார், யார் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இத்திருட்டில் சம்பந்தப்பட்டவர்கள் மாயவரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சக்கரபாணி, இராஜரத்தினம் என்ற இருவர். இவர்கள் இருவருக்கும் சிறைதண்டனை கொடுக்கப் பட்டது.

Sainik Schools

* 599 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of Sainik Schools located in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் உள்ள அமராவதி நகரில் ஓர் சைனிக் பள்ளி உள்ளது.

1973 டிசம்பர் 4]

திரு. ஆ. பரந்தாமன் : இந்தப் பள்ளியில் சேருகின்ற மாணவர்கள் பெரும்பாலும் பணக்காரர்களாக இருக்கிறார்கள். காரணம், அவர்கள் அதிகமாக பீஸ் செலுத்தவேண்டியிருக்கிறது. அதனால் பணக்காரர்களுடைய பிள்ளைகள் மட்டும்தான் அங்கே சென்று படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இம்மாதிரி மேலும் ஒன்றிரண்டு பள்ளிகள் ஏற்படுத்தி ஏழை எளியவர்கள் அங்கே பயில அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே பணக்காரப் பிள்ளைகள் மட்டும் என்பதல்ல. ஏழைகளாக இருப்பவர்களுக்கும் நாம் 50 பேர்களுக்கு முழு ஸ்காலர்ஷிப் தருகிறோம். ஆக, ஒரு பள்ளி நடத்துவதற்கு ஆண்டு ஒன்றுக்கு தமிழக அரசுக்கு ரூ. 10 லட்சம் செலவாகிறது. அதன் மூலம் படித்து வெற்றி பெற்றவர்களிலே கூட 10, 15 பேர்கள் தான் கடைசியில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த நிலையிலே அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்றபடி, ரூ. 2,300-க்கு மேற்படாத அளவுக்கு அவர்களுக்கு உதவிச் சம்பளம் தந்து வருகிறோம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்த சைனிக் பள்ளிக்கு மாநில அரசுக்கு மட்டும் ரூ. 10 லட்சம் செலவாகிறது என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். மத்திய அரசின் பங்கு என்ன ? மாநில அரசு ரூ. 10 லட்சம் செலவு செய்கின்ற இந்தப் பள்ளியில் இந்தி மொழி கட்டாயமாக பயிற்றுவிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இரு மொழிக் கொள்கையின் அடிப்படையில் அதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கே முதல்வர், தலைமை ஆசிரியர், ரிஜிஸ்டிரார் ஆகியவர்களுடைய சம்பளத்திற்கு மட்டும் மத்திய அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. மற்றையபடி கட்டடம் தருதல், நிலம் தருதல், இடம் தருதல், வீடுகளை கட்டித் தருதல் முதலியவைகளுக்கான உதவித் தொகை, மற்ற ஆசிரியர்களுடைய சம்பளம் ஆகியவைகளுக்கு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது மாநில அரசு. அத்துணை பொறுப்பும் மாநில அரசைச் சார்ந்ததாக இருக்கிறது. அந்தப் பள்ளி டிபென்சைப் பொறுத்து அமைந்திருக்கிற காரணத்தினால், டிபென்சில் ஏற்றுக்கொள்ளப்படுகிற மொழியும் அங்கே பயிற்றுவிக்க வேண்டியது அவசியமாக இருக்கும். மற்றைய

[1973 டிசம்பர் 4

பயிற்சி பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகிறது. இருந்தாலும் அந்த இடத்தில் டிபென்ஸ், பாதுகாப்பைப் பொறுத்த வரையில் அத்தகைய மொழி அங்கே போதிக்கப்படுகிறது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: நம்முடைய மாநில அரசு சுமார் 50 ஏழை மாணவர்களுக்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். இன்னும் இங்கே அதிகமாக ஏழை மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்க முடியாத காரணத்தினால் அதிலே சேர்ந்து படிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. வேறு மாநிலங்களிலிருந்து அங்கே வந்து படிப்பதற்கு அந்த அரசுகள் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், இன்னும் அதிகமான ஏழைகள் படிப்பதற்கு வாய்ப்பு, வசதி யிருக்கும்படியாக இன்னும் அதிகமாக ஸ்காலர்ஷிப் கொடுக்கிற நிலையில் இந்த அரசு உத்தரவிடுமா? வரம்பு எதுவும் இல்லாத முறையில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாம் பொறுப் பேற்றுக் கொண்டிருப்பது 50 பேர்களுக்கு என்றாலும் கூட, 1969-70-ல் 68 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். 1970-71-ல் அத்துணை பேர்களும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 102 பேர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 1971-72-ல் 60 பேர்கள், 1972-73-ல் 68, 1973-74-ல் 50 பேர்களுக்கு கொடுத்திருக்கிறோம். மற்றவர்கள் கொடுத்து படிக்கவேண்டும் என்று வைத்திருக்கிறோம். யாரும் கொடுத்து படிக்க முன்வரவில்லை. 102 பேர்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். 10 லட்சம் ரூபாய் செலவழித்தாலும், எத்துணை பேர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தால், 7, 8, 6 பேர்கள் என்று தான் எடுத்துக்கொள்கிறார்கள். இவ்வளவு ஆண்டு காலம் படித்தும், அவர்களில் பல பேர் மறுபடியும் மற்ற மாணவர்களைப்போல் புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்ஸி. படிப்புக்கு போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். 102 பேர்களுக்குக் கொடுத்தோம். 10 ஆண்டுகள் காலம் படித்துவிட்ட பிறகு 7, 8 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆக, 50 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கிறோம் என்றால் 5, 6 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக நாம் 50 பேர்கள் வரையில் ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம், மற்றவர்கள் பணம் கொடுத்து படிக்கலாம் என்ற நிலையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.